வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019

## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | சித்திரக்கலை | புள்ளித்திட்டம் |
|---|---|---|

**புள்ளித்திட்டம்**

வினாத்தாள் கட்டமைப்பு

வினாத்தாள் I - இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

பகுதி I – 5 தொகுதிகளைக் கொண்ட 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 01 புள்ளிவீதம் 40 புள்ளிகள்.

பகுதி II - இப்பகுதி உபபகுதிகள் மூன்றினைக் கொண்டுள்ளது.

பகுதி அ – கலாசார பின்னணியும் இரசனையும் - இலங்கை
கட்டமைப்புத்தன்மை கொண்ட கட்டுரை வகையான வினாக்கள் - மூன்று

பகுதி ஆ – கலாசார பின்னணியும் இரசனையும் - இந்தியா
கட்டமைப்புத்தன்மை கொண்ட கட்டுரை வகையான வினாக்கள் - இரண்டு

பகுதி இ - கலாசார பின்னணியும் இரசனையும் - ஐரோப்பா
கட்டமைப்புத் தன்மை கொண்ட கட்டுரை வகையான வினாக்கள் - இரண்டு

'அ' பகுதியில் இருந்து இரண்டையும் 'ஆ' 'இ' பகுதியில் இருந்து தலா ஒன்றுமாக மொத்தம் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவிற்கு 15 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகள் மொத்தமாக ஒரு வினாத்தாளுக்கு கிடைக்கும் மொத்தப்புள்ளிகள் 100.

வினாத்தாள் II – நேரம் : மூன்று மணித்தியாலம்
அசையாப் பொருட்கூட்டமும் வர்ணந்தீட்லின் பொருட்டு, ஒரு செய்முறை வினா மட்டுமே உள்ளது. இதற்கு புள்ளிகள் 100.

வினாத்தாள் III – நேரம் : மூன்று மணித்தியாலம்
சித்திர ஒழுங்கமைப்பு தலைப்பு – 4
அலங்கார ஆக்கத்தலைப்பு – 3
கிறபிக் சித்திர ஆக்கத் தலைப்பு – 3

இப்பகுதியில் இருந்து ஒரு வினாவை மட்டும் தெரிவுசெய்து ஒரு வர்ணச்சித்தித்தை மட்டும் நிர்மாணித்தல் வேண்டும்.

இறுதிப் புள்ளிகள் கணிப்பிடுதல் : வினாத்தாள் I = 100
வினாத்தாள் II = 100
வினாத்தாள் III = 100
இறுதிப் புள்ளிகள் = 300 ÷ 3 = 100

agaram.lk

## பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| 01. 3 | 11. 4 | 21.2 | 31. 5 |
| 02. 2 | 12. 2 | 22. 5 | 32. 4 |
| 03. 5 | 13. 4 | 23. 1 | 33. 4 |
| 04. 4 | 14.3 | 24. 2 | 34. 4 |
| 05. 5 | 15. 4 | 25.4 | 35. 3 |
| 06. 4 | 16. 5 | 26. 2 | 36. 4 |
| 07. 2 | 17. 5 | 27.3 | 37. 3 |
| 08. 4 | 18. 5 | 28.3 | 38. 2 |
| 09. 4 | 19. 2 | 29. 2 | 39. 5 |
| 10. 2 | 20. 4 | 30. 2 | 40. 4 |

**(40 புள்ளிகள்)**

## பகுதி II

***வினா 1***

(i) கரகம்பிட்டிய, கத்தளுவ, முல்கிரிகல, தெல்வத்த

(ii) வெசந்தரஜாதகம், மாரயுத்தம் ஆகிய ஓவியங்கள் பற்றிக் குறிப்பிடவேண்டும்.

(iii) தௌபத்த ஜாதககதை கலாரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இதற்குக் காரணம் இந்த ஓவியத்தில் பெண்கள் அடங்கியிருப்பதாகும்.

இதனைப் பற்றி திரு. C.D.S குலதிலக கூறுகையில் "முல்கிரிகல விகாரைச் சுவரோவியங்களில் ஒரு முக்கியத்துவமான அம்சமுள்ளது. அது என்னவெனில் இசைக்கருவி மீட்டு நடனம்புரியும் பெண்களையும் பறைகொட்டும் பெண் களையும் றபான் அடிக்கும் பெண்களையும் இசைக் கருவிகளை கையாள்வதாகக் காட்டியிருப்பதாகும்" என்கிறார்.
இந்த ஓவியத்தில் மேற்கூறப்பட்ட கருவிகளுக்கு மேலதிகமாக வயலின் கருவியின் ஆரம்ப வடிவமாக இனங்காணக்கூடிய மற்றுமொரு கருவி ஒன்றும் காணப்படுகிறது.

மேலைத்தேய ஆடையமைப்பு, இசைக்கருவிகள் காணப்படுகிறது, அது மட்டுமல்லாது இவ் ஓவியத்தில் மரங்களின் அமைப்பு இயல்புப் பாங்கானதாக காணப்படுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

***வினா 2***

(i) 1. விலங்குருவங்கள் - சிங்கம், யானை, அன்னம்

2. கற்பனை வடிவான உருவங்கள் - மகரம், கடற் கன்னி, (கிந்துரி) யானையைத் தூக்கும் பறவை / குஞ்சரப் பறவை, (எத்கந்த) லிகினியா, இருதலை பட்சி (பேருண்ட பட்சி)

3. பூவேலைப்பாடுகள் கொடிவலை அலங்காரம் கொடிவலை, பிரை மலர், தாமரை மலர்.

4. அக்காலச் சமூகத் தொனிப்பொருட்கள் / மக்கள் வாழ்வு
வெளிநாட்டுப் போர் வீரன், உள்நாட்டுப் படைவீரன், றபான் அடிப்போர்
குழந்தைக்குப் பாலூட்டும் தாய்

5. கரையலங்காரம் (லீஸ்தர)
(இவற்றில் இரண்டு குறிப்பிட்டால் போதுமானது)

(ii) விஜயஉத்பாய

- சிலைமனையை அண்மித்து விஜயோத்பாய எனப்படும் அமைப்பும் சிறப்பு வாய்ந்ததொன்றாகும்.
- அதன்கீழ் பகுதி 4 புத்தர் சிலைகளுடன் நான்கு சிறிய சிலை மனைகளாகக் கல்லால் அமைக்கப்பட்டுள்ளன.
- அதன் மீது பெரியளவிலான சைத்தியத்துடன் இணைந்த சிறியளவிலான 4 தூபிகளைக் கொண்ட கட்டட நிர்மாணிப்பு காணப்படுகிறது.
- பாரிய அளவிலான தூபிக்கு மேலாக 4 தூண்கள் மீது அமைக்கப்பட்ட கூரையொன்று காணப்படுகிறது.

(iii) யாப்பகூவ படிவரிசை, யன்னல் வேலைப்பாடு,கதவு நிலை, பூங்கலசத்துடன் பெண், சிங்கம் ஆகியவை பற்றி குறிப்பிடவேண்டும்.

**வினா 3**

(i) ஹரிப்பீரிஸ், ஒப்ரிக்கொலட், மஞ்சுசிறி, ஐவன்பீரிஸ், தரனியாகல, ரிச்சட் கப்ரியல், ஜோர்ச்கீட்

(ii) புத்தபெருமான் மகியங்கனைக்கு வருகை தரல் அல்லது புனித பாதங்களைப்பதித்தல் பற்றிக் குறிப்பிடவேண்டும்

(iii) **பெல்லன்வில விகாரையிலும் காணப்படும் 'இயமனின் தோல்வி' என்ற ஓவியம்**
வெற்றி வாகையுடன் காணப்படும் புத்தபெருமானின் உடலில் இருந்து வெளிப்படும் ஒளிக்கீற்று சாதரண அளவை மீறி அலை வடிவில் நீளமாக வரையப்பட்டுள்ளது.

புத்தரின் பேபராளிக்கு கட்டுபட்ட இயமதூதர்கள் தோல்வியைத் தழுவி வேதனை ததும்பும் உடல் நிலையில் காட்டப்பட்டுள்ளர்

**கோதமி விகாரையிலும் காணப்படும் 'இயமனின் தோல்வி' என்ற ஓவியம்**
நவீன பாணியில் வரையப்பட்டுள்ளது
யமனின் ஆட்களின் உருவங்கள் கனவடிவ வாதப்பண்பில் காணப்படுகிறது.
வெளிப்பாட்டைத் தீவிரப்படுத்த இரேகைள் உபயோகப்படுதப்பட்டுள்ளது.

**வினா 4**

(i) கனிஷ்க மன்னனின் உருவம், புத்த உருவம்

**(ii) "துஸ்தரக் கிரியாவ" நிலைக் காட்டும் புத்தர்சிலை.**

- இயற்கை சரீர அமைப்பை வெளிப்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சியில் வெற்றிபெறல். இயற்கைப் பிரமான இலச்சணத்தை வெளிக்காட்டுவதில் திறன் பெற்று இருத்தல்.
- அரைவாசி மூடிய உள்ளடங்கிய கண்கள், பின் பக்கத்துடன் ஒட்டிய வயிறு,வெளியே தெரியும் நரம்புகளுடன் கூடிய உடல் இயற்கையாக தோற்றத்துடன் காணப்படல்.
- போதிசத்துவரின் சரிதையில் வருகின்ற "துஸ்தரக் கிரியாவ" நிலையை வெளிக்காட்டும் பொழுது உண்மையான நிகழ்வு போன்று வெளிப்படுத்துதற்கு காந்தாரக் கலைஞர் முயன்றுள்ளனர். அதில் வெற்றியும் பெற்றுள்ளனர்.

(iii) காந்தார புத்தர்சிலை - தக்தி பகீர்.
- ஹோட் மற்தர்.
- சகறி பக்ளோள்
- பிரெகம்.

மதுரா புத்தர்சிலை - மதுரா நின்ற நிலைச் சிலை,
- கத்ரா சிலை.

இச் சிலைகளை ஒப்பீட்டு நோக்குமிடத்து காந்தாரச் சிலை இயற்கைத் தன்மையை வெளிப்படுத்துற்கு எடுத்த முயற்சி, எனினும் இயற்கை இயல்பு வெளிப்பாடு குறைவு. பிரமாணப் பண்பு சிறப்பாக காந்தார சிலைகளில் காணப்படும்.
மதுரா சிலைகளில் ஆத்மீகக் குணப் பண்புகளை வெளிப்படுத்துதற்கு முயற்சிக்கப்பட்டு உள்ளதெனக் கூறலாம்.
மதுரா புத்தர் சிலையிடையே மதுரா நின்ற நிலைப் புத்தர்சிலை சிறந்த சிலையாகும். மிக இளமையுடன் கூடிய அழகான வடிவைக் கொண்ட உடல்வாகுடன், செதுக்க வேலைப்பாட்டுடன் கூடிய ஒளிவட்டம், உடலுடன் ஒட்டிய சுருக்குகளுடன் கூடிய காவி உடை, சுருள் கேசம் ஆகியன மிக மென்மையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
இதன்படி காந்தார புத்தர் சிலையிலும் பார்க்க மதுராப் புத்தர் சிலையில் உயர் ஆத்மீக குணவியல்பு காணப்படுவதாக கூறலாம்.

***வினா 5***

(i) குடைவரைக்கோயில்கள், கற்றளிகள்

(ii) பஞ்ச பாண்டவர் இரதங்கள்

- பஞ்ச பாண்டவர் இரதங்கள் தனிக் கருங்கல்லைப் பொழிந்து அமைக்கப்பட்ட ஆலயங்களாகும்.
- இந்த இரதங்கள் முறையே திரௌபதி, துர்க்கா இரதம், அர்ச்சுனன் இரதம், பீமன் இரதம், தர்மராஜ இரதம், நகுல சகாதேவ இரதம் என்பவையாகும். நகுல சகாதேவ இரதங்களைத் தவிர ஏனைய இரதங்கள் தனிக் கல்லால் அமைக்கப்பட்டுள்ளன.
- இவ்வாலயங்கள் கி.பி 7ம் நூற்றாண்டின் மத்திய பகுதியை அல்லது பிற்பட்ட காலப்பகுதியைச் சேர்ந்ததாக நம்பப்படுகிறது.
- இவ்வாலயத் தொகுதி பல்லவ கட்டட நிர்மாணிப்பின் ஆரம்ப கால இயல்புகளை பிரதிபலிக்கின்றன.

(iii)இந்து சமய புராணக் கதையில் வருகின்ற செய்திகள் பல்லவ கலைஞரின் தலைப்புகளாக அமைந்தன.அவற்றுள் கங்கையின் இறக்கம் முக்கிய படைப்பாகும். இச் சிற்பம் மகாவலிபுரம் நகரில் கடற்கரை ஓரத்தில் கற்பாறைகளில் செதுக்கப்பட்டுள்ளது. இது தற்போது "ஆகாய கங்கையின் இறக்கம்" என்னும் பெயரில் அழைக்கப்படு கிறது. இச் செதுக்கல் பல்லவ கலைஞர்களின் திறமைக்கு எடுத்துக்காட்டாகக் காணப்படும் கலைப்படைப்பாகும். இதில் பகீரதன் என்றும் முனிவர் தவம் செய்து சிவபெருமானிடம் வேண்டி ஆகாயத்தில் இருந்து கங்கை நதியைப் பூமிக்கு வரவழைத்த கதை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தமக்கு கங்கை நதியின் வருகையினால் நீர் கிடைத்த மகிழ்ச்சியில் சந்தோசப்படும் தேவர்கள், மனிதர், பிராணிகளின் வடிவங் கள் போன்ற பலவற்றை இங்கு செதுக்கியுள்ளனர்.
இச் சிற்பம் ஏறக்குறைய 30 யார் நீளம் 23 அடி உயரம் மலைப்பாறையின் மத்தியில் இயற்கையாக ஏற்பட்ட ஓர் பிளவில் நீர்வீழ்ச்சி ஒன்றுண்டு. இந்நீரில் நாகர்கள் நாகினிகள் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. இது புனிதநீரின் குறியீடாக அமைந்துள்ளது. இருமருங்கிலும் தெய்வங்கள், மனிதர்கள், பலவகையான மிருகங்களினதும்

agaram.lk

உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பிளவைப் பார்த்துக் கொண்டு அல்லது பிளவை அணுகிக்கொண்டு பத்தி செலுத்தும் பாவனையில் அனைத்து உருவங்களும் அமைந்துள்ளன. இந்நீர்வீழ்ச்சியின் இடதுபக்கத்திலுள்ள ஒரு சிறு கோவிலின் அருகில் நிற்கும் தோற்றத்திற் சிவபெருமானின் உருவச் சிலை காட்சியளிக்கின்றது. இக்கோவிலின் முன்னால் மெலிந்த உருவம் கைகளை மேலே உயர்த்தி தவம் செய்யும் பாவனையில் காணப்படுகிறது. இது பகிரதனின் உருவம் என கருதப்படுகின்றது. இச் சிற்பத்தில் செதுக்கப் பட்ட மிருகங்களுள் பிரசித்தி பெற்ற யானைகளாக உருவங் களும், பகீரதனின் தவம் செய்யும் நிலையை அப்படியே பின்பற்றிய நிலையில் இருக்கும். உருத்திராட்சப் பூனையும், பூனையை நம்பி அதன் கால்களில் விளையாடிக் கொண்டிருக்கும் சுண்டெலியும், பின்னங்காலால் மூக்கை சொறியும் பாவனையில் நிற்கும் கலைமானை நோக்கிய வண்ணம் நிற்கும் ஒரு சோடி மான்களும் அடங்கும். இதை விட வட்டமான ஓரிடத்தில் செதுக்கப்பட்டுள்ள குரங்கு குடும் பத்தின் சிலை உயிருள்ளதாகவும், அதிக ஆச்சரியத்தை ஊட்டுவதாகவும் உள்ளது.

**வினா 6**

(i) வெற்றிவளைவுகள், வெற்றித்தூண்கள், கொலுசியம்

(ii) இவற்றில் ஒன்றைப்பற்றி குறிப்பிடவேண்டும்

(iii)
- கிரேக்க சிற்பங்கள் கருத்தியல் கொண்ட தெய்வீக அழகு வெளிப்படுமாறு அமைக்கப்பட்ட போதிலும் உரோம சிற்பங்கள் மனித நேயம், இயல்புநிலை என்பன அடிப்படையாகக் கொண்டே நிர்மாணிக்கப்படுகின்றன.
- ஒவ்வொரு தனிநபர்களினதும் பிரத்தியேக மற்றும் உள்ளார்ந்த குண இயல்புகள் மெய்யான வடிவில் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

(iv) கெரகெல்லா, ஒகஸ்டஸ், யூலியர்சீசர் ஆகிய சிலைகள் இதற்கு உதாரணமாகும்.

**வினா 7**

(i) வான்கோ, கெகான், போல் செசான்

(ii) மேரி கசற்றின் ஸ்தானம் (The Bath) ஓவியம் பற்றி குறிப்பிடவேண்டும்.

(iii) அவிக்நோனின் யுவதி ஓவியம் தொகுப்பாய்வு கனவடிவவாத முறையில் கேத்திரகணித தன்மைகளில் பெண் உருவங்கள் காணப்படுகிறது. குவர்ணிக்கா ஓவியம் பகுப்பாய்வு கனவடிவ வாதமுறையில் உருச்சிதைப்பு முறையில் வரையப்பட்டுள்ளது.

**புள்ளி வழங்கல் - (i) 02 புள்ளி (ii) 05 புள்ளி (iii) 08 புள்ளி மொத்தம் -15 புள்ளிகள்**

agaram.lk